# சங்ககால பெண்பாற் புலவர்களின் பெண்ணியச் சிந்தனைகள் (புறநானூறு முன்வைத்து)

# Feminist Thoughts of Feminist Poets of the Sangam Period (Puranaanooru Put in Front)

***முனைவர் த. ரெஜித்குமார்***
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வேதாரண்யம்

**Dr. D. Rejithkumar**
*Guest Lecturer, Department of Tamil*
*Government Arts and Science College*
*Vedaranyam*

**ஆய்வுச் சுருக்கம்**

*பெண் என்பவள் சமுதாயத்தில் தாயாகவும், மகளாகவும், தங்கையாகவும் போற்றி மதிக்கப்பட்டாலும் அவளுடைய இருப்பு என்னவோ வீடு என்ற உலகத்திலுள்ளேதான். அப்படிப்பட்ட சூழலில் சங்ககால பெண்பால் புலவர்கள் தங்களின் இருப்பை மீறியும் தங்களின் வலிகளை இலைமறைக்காயாக கவிதைகளில் பதிவுச் செய்துள்ளனர். சங்ககால பெண்பாற் புலவர்களின் பெண்ணியச் சிந்தனைகள் (புறநானூறு முன்வைத்து) எனும் இக்கட்டுரையில் புறநானூற்றில் இல்லறவாழ்வில் பெண்ணின் சிக்கல்கள், மகண் மறுப்பு, மறக்குடி மகளிர் வீரம், கணவனை இழந்த பெண்களின் வலிகள் ஆகியவை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:***
*சங்கப் பெண்பாற் கவிஞர்கள், பெண்ணியம், இல்லற வாழ்வில் பெண்ணியச் சிக்கல்கள், மகண் மறுப்பு, பெண் வீரம், கைம்மைப் பெண்கள்.*

**Abstract**

*A woman is respected in society as a mother, daughter and sister, but her presence is within the home. It is in this context that Sangam-era feminist poets have recorded in poetry the pains that transcend their existence. This article, Feminist Thoughts (Puranaanooru Put in front) by Sangam Feminist Poets, explores women's problems in domestic life, daughter rejection, heroism of oblivious women, and the pain of women who have lost their husbands.*

***Keywords:***
*Sangam Female Gender Poets, Feminism, Feminist Issues in Domestic Life, Daughter Refuses, Female Heroism, Handmaidens*

**Citation**

Rejithkumar, D. "Feminist Thoughts of Feminist Poets of the Sangam Period (Puranaanooru Put in Front)." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 27–34.

**முன்னுரை**

*பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் சின்னங்களாக இருப்பவை சங்க இலக்கியங்களாகும். சங்க காலச் சமூகத்தையும், மக்களின் வாழ்வியலையும் அறிந்து கொள்ளுவதற்கு பிற வரலாற்று ஆவணங்களைக் காட்டிலும் சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. சங்க இலக்கியமானது தனித்தனி குழுக்களாக வாழ்ந்து வந்த இனக்குழு மக்களின் வாழ்க்கை நிலை அழிந்து நிலவுடமையாளர் சமூகமாக மலர்ந்த காலக்கட்டத்தைக் குறிக்கிறது. சங்க இலக்கியத்தில் திணைப் பாகுபாடு சிறப்பிடம் பெறுகின்றது. இதனால் ஐவகை நிலம் சார்ந்த இனக்குழு மக்களின் வாழ்வியலோடு சாதீய படிநிலைகளைக் கொண்ட சமூகத்தை எடுத்துக் காட்டுகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும். சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் எதிர் கொண்ட சிக்கல்களை தங்கள் கவிதைகளின் வழியே பெண்ணிய சிந்தனையோடு எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை புறநானூற்று வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**பெண்பாற் புலவர்கள்**

*சங்க காலத்தில் ஆணுக்கு இணையாகப் பெண்களும் கல்வியறிவு பெற்றுள்ளனர். இதனை சங்க இலக்கியம் பாடிய பெண்பாற் புலவர்களை கொண்டு அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தைப் பாடிய புலவர்கள் 473 பேர். இதில் சில பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்களை அறிய முடியவில்லை. இத்தகைய புலவர்களுள் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை41 ஆகும். பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை குறித்து தமிழாய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையினை உ.வே.சா 38 எனவும், எஸ்.வையாபுரிபிள்ளை 30 எனவும், புலவர் கா.கோவிந்தன் 27 எனவும், ஔவை நடராசன் 41 எனவும், ந.சஞ்சீவி 25 எனவும், தாயம்மாள் அறவாணன் 45 எனவும் குறிப்பிடுகின்றனர். சங்க காலத்தில் இவர்கள் மட்டுமின்றி பல பெண்பாற் புலவர்களும் இருந்திருக்க வாய்ப்புண்டு. ஏனெனில் சங்க இலக்கியம் முழுமையும் ஆங்காங்கே உள்ள கவிதைகளை ஒன்றாக தொகுக்கப்பட்டவையாகும். எனவே தொகுப்பாளரின் மனம், நோக்கம் காரணமாகவோ அல்லது வேறுத் தடையின் காரணமாகவோ பல புலவர்களின் பாடல்கள் தொகுக்கப்படாமல் போயிருக்கலாம்.*

**பெண்ணியம்**

*சமூகத்தில் பெண் என்பவள் மென்மையானவள், வலிமையற்றவள் என்று பெண்களை வீட்டினுள் அடக்கி ஒடுக்கி வைத்திருந்த நிலையில் பெண்களின் எல்லாவிதமான சமூகச் சிக்கல்களையும் வலிகளையும் எடுத்துரைக்கும் நோக்கில் பெண்ணிய கோட்பாடுகள் உருவானது. பெண்ணியம் என்பது பெண்களின் எல்லா சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். இதன்மூலம் உலகளாவிய அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்று சார்லட் பன்ச் கூறுவதாக பிரேமா (2000. 13-14) மேற்கோள் காட்டுகிறார். சங்க இலக்கியங்கள் முழுமையும் தந்தைவழிச் சமூக அமைப்பினைப் பார்க்க முடிகிறது. எனவே தாய்வழிச் சமூகம் அழிந்து பின்னர் தந்தைவழிச் சமூகம் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் தாய்வழிச் சமூகத்திற்கானச் சிலவழக்காறுகளும் இலக்கியத்தில் அரிதாக இடம்பெற்றுள்ளன. அஞ்சியத்தைமகள்நாகையார் (அகம்:352) என்ற பெண்பாற் புலவர் பெயர் தாய்வழிச் சமூகம் இருந்துள்ளமைக்குச் சான்று பகர்கின்றது. தந்தைவழிச் சமூக அமைப்பின் காரணமாக, சங்க இலக்கியம் முழுமையும்*

*ஆணின் ஆதிக்கம், அவர்களின் அதிகாரப்பிணைப்புக்குள் பெண் அடங்க வேண்டும் என்ற நியதி, பெண்ணின் இருப்பை வீட்டினுள்ளே அடக்கி கொண்டு அவர்களின் இன்பத்திற்கான நுகர்வுப் பொருளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.*

*தற்போது வருகின்ற பெண்ணியம் குறித்த ஆய்வுகள் அனைத்தும் பெண்மொழி அல்லது பெண்குரல் என்றே வருகின்றன. பெண்மொழி அல்லது பெண்குரல் என்பது பெண் எழுதுவது. பெண் தன்னை உணர்ந்து கொண்டு தனக்கான சிக்கலை தன் சூழலில் எடுத்துரைப்பதாகும். தன்னை உணர்தல் என்பது தன்னைப் போன்ற பிற பெண்களின் இயல்பையும் சிக்கலையும் உணர்த்துவதாகும். புறநானூற்றில் ஔவையார், பொன்முடியார், காக்கைப் பாடினியார், பூங்கன் உத்திரையார் போன்ற பெண்பாற் புலவர்கள் தங்களின் சிக்கல்களைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.*

**இல்லறத்தில் பெண்**

*மானுட சமூகமானது குடும்பம் என்ற அமைப்பினுள் கட்டுண்டு காணப்படுகின்றது. இதனுள்திருமணம், பாலுறவு, குழந்தைப்பேறு முதலிய முக்கிய செயல்பாடுகள் நடைபெறுகின்றன. இதில் பெண் இல்லத்தரசியாக விளங்குகின்றாள். சங்க இலக்கியத்தில் பெண் குடும்பத்தில் இணைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலை. எனவே பெண் குடும்பம், வீடு என்று குறுகிய பாதையிலே தங்களின் புழக்கத்தை அமைத்து கொள்ள வேண்டிய சூழல். இப்பாதையில் குழந்தையைப் பெறுதல் என்பது முக்கிய செயலாக கருதப்பட்டது. அவ்வாறு குழந்தையைப் பெறும் போது ஆண் குழந்தையை பெற்றெடுப்பதையே சிறப்பாகக் கருதப்பட்டுள்ளது. பொன் முடியார் என்ற பெண்பாற் புலவர் சங்க கால பெண்களின் கடமைகளாக,*

***ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே***
***சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே***
***வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே***
***நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே***
***ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி***
***களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே** (புறம்: 312)*

*என்ற பாடல்வழி உணர்த்துகின்றார். இதில் மகனைப் பெற்றெடுத்தல் மட்டும் தாயின் கடமையில்லை. அவனைச் சமுதாயத்திலுள்ள சிக்கல்களை எதிர்கொள்ளுகின்ற வகையில் உடல் வலிமையும், மனவலிமையும் உடையவனாக வளர்த்து சமுதாயத்திற்கு வழங்குவதும் அவளுடைய கடமையாகும். இப்பாடலின் ஆசிரியர் பெண்பாற் புலவராக இருப்பதால் என் தலைக்கடனே என்கிறார். எனவே மறக்குடியில் பிறந்த பெண்கள் அனைவரும் சமூக கடமையுள்ளவர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளமை காணலாம்.*

*பழந்தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெறுகின்றது. இவ்விருந்தோம்பலை பெண்களே செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இல்லத்தரசியின் கடனாக தொல்காப்பியர்,*

***விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் (தொல்: கற்பு. 11)***

*என்கிறார். சங்ககால குலமகளிர் தங்களின் வீட்டிற்கு வருகின்ற விருந்தினருக்கு அமிழ்தம் போன்ற உணவினை மகிழ்ந்து வழங்கியுள்ளனர்.*

**அமிழ்து அட்டு இனாக் கமழ்குய் அடிசில்**
**வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கைமகளிர் (புறம்: 10)**

என்ற பாடலின் மூலம் மகளிரின் விருந்தோம்புகின்ற இயல்பினை அறியலாம். மேலும், சங்க மகளிர் தன்னுடைய இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரை மிகவும் முகமலர்ச்சியோடு உபசரித்துள்ளனர். தம்மிடம் உணவுப் பொருட்கள் இல்லாத வேளையில் விதைப்பதற்கு வைத்திருந்த தினையினை உரலில் இட்டு குற்றி உணவுத் தயார் செய்து உபசரித்துள்ளனர். இதனை,

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறுத்துமாறு எதிர்ப்பை பெறா அமையின்**
**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ விலள் (புறம்: 333)**

என்ற பாடல் சான்றுரைகின்றது. இன்றும் தமிழ் சமூகத்தில் இத்தகைய விருந்தோம்பல் பண்பாடு காணப்படுகின்றமை குறிப்பிடதக்கதாகும்.

பெண்களின் வாழ்வியலில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆடைகளில் பெரும் மாறுபாடுகள் காணப்படுகின்றன. இவைகள் ஆணாதிக்க சமூகத்தினால் பெண்களை அடிமைப்படுத்தும் நோக்கோடு திணிக்கப்பட்டவையாகும். சங்க காலத்தில் மகளிர் கணவரோடு சேர்ந்திருக்கும் காலங்களில் நல்ல ஆடைகளினாலும், அணிகலன்களினாலும், மலர்களினாலும் ஒப்பனைகளைச் செய்து மகிழ்ந்திருப்பர். இவ்வழக்கத்தை,

**புணர்ந்தோர் பூவணி அணிய (புறம்: 194)**

என்று குறிப்பிடுகின்றது. அதேப்போன்று கார்காலத்தில் மகளிர் தம்முடைய காதலனாகிய கணவனை பிரிந்திருக்கும்போது தனிமைத் துன்பத்தால் கூந்தலில் நெய் பூசாமலும், பூச்சூடாமலும் பொலிவிழந்திருந்ததை,

**நெய்யோடு துறந்த மையிருங் கூந்தல்**
**மண்ணுறு மணியின் மாசுஅற மண்ணிய (புறம்: 147)**

இவ்வாறு கணவன் தன்னோடு இருக்கும் போது அழகுடனும், பிரிந்திருக்கும் போது எவ்விதமான ஒப்பனைகளையும் செய்து கொள்ளுவதற்கு ஆணாதிக்க சமூகம் மறுத்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

### மகண் மறுத்தல்

ஒரு இனத்தைச் சேர்ந்தவர் பிற இனத்தவருடன் திருமண உறவு வைத்துக் கொள்ளுவதில்லை. இதனை மீறி ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பெண் கேட்க; பெண் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவிப்பதை மகண் மறுத்தல் என்பர். புறநானூற்றில் ஆணாதிக்க வெளிப்பாட்டின் காரணமாக மகண் மறுத்தல் செய்திகள் இடம் பெற்றுள்ளன. மகண் மறுத்தல் காரணமாகப் பல போர்களும் நடைபெற்றுள்ளன. மறக்குடி பெண்களை யாரும் தங்களின் செல்வத்தைக் காட்டி திருமணம் செய்து கொள்ள முடியாது. பெண்ணின் தந்தையோ, உடன்பிறந்தவர்களோ வேந்தர்கள் தருகின்ற செல்வத்தை விரும்பாதவர்கள். போரையே விரும்புகின்றவர்கள். தகுதியில்லாதவர்க்கு கன்னியை தருதல் இல்லை என்று கூறுவர். இவ்வாறு ஆண்கள் மட்டுமின்றி தாயும் தன் மகளை மறக்குடியில் பிறந்த ஒருவனுக்கே மணம் முடிக்க எண்ணுவாள். இருந்தும் வீரனின் கல்வி, புகழ் முதலியவற்றைக் கொண்டு தாய் விரும்பினாலும் ஆண்கள் அதற்கு உடன்படுவதில்லை.

*புறநானூற்றில் பரணர் பாடல் ஒன்று கண்டோர் கூற்றாக அமைந்துள்ளது. அதில் மறக்குடி மகளை விரும்பி மணம் முடிக்க மன்னன் ஒருவன் வருகிறான். பெண்ணின் தந்தை திருமணத்திற்கு உடன்படாததால் அவனுடைய கடுஞ்சினத்திற்கு ஆளாகுகிறான். மன்னன் பெண் கேட்டு வந்த போது அவனை எதிர்கொண்டு வரவேற்று தன் மகளை மணம் முடித்து கொடுப்பதே தன் கடமை என்பதை சிற்றரசன் உணர்ந்திருத்தல் வேண்டும். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. தாய் தன்னுடைய மகளை அழகுடையவளாக வளர்த்தமையால் மன்னனிடம் பகைமை தோன்ற காரணமாயிற்று. எனவே மன்னனின் சீற்றத்தால் அவனுடைய அருங்கடி மூதூர் அழிவது உறுதி என்று கூறுவதாகப் பாடல் அமைகின்றது.*

***வேட்ட வேந்தனும் வெஞ்சினத் தினனே;***
***கடவன கழிப்பு இவள் தந்தையுஞ் செய்யான்;***
***ஒளிறு முகத்து ஐந்திய வீங்குதொடி மருப்பின்***
***களிறும் கடிமரம் சேரா; சேர்ந்து***
***ஒளிறுவேல் மறவரும் வாய் மூழ்த்தனரே;***
***இயவரும் அறியாப் பல்இயம் கறங்க,***
***அன்னோ, பெரும் பேதுற்றன்று இவ் அருங்கடி மூதூர்;***
***அறன் இலள் மன்ற தானே - விறல்மலை***
***வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்***
***முகைவனப்பு ஐந்திய முற்றா இளமுலைத்***
***தகை வளர்த்து எடுத்த நகையொடு***
***பகை வளர்த்திருந்த இப்பண்புஇல் தாயே (புறம்: 336)***

*பெண்ணை முன்னிருத்தி போர் நடைபெற்றதாக இப்பாடல் காட்டப்பட்டுள்ளது. குன்றூர் கிழார் மகனான் என்ற புலவர் தன்னுடைய பாடலில் மூவேந்தர்களும் மறக்குடி மகளை மணம் செய்ய வீரருடன் வந்த போதிலும், தன்னுடைய தகுதிக்கு ஏற்றவாறு தன்னை வணங்காதவர்க்கு தன் மகளை மணம் செய்து கொடுக்க மறுப்பதை,*

***கொற்ற வேந்தர் வரினும், தன்தக***
***வணங்கார்க்கு உகுவன் அல்லன் வண் தோட்டுப்***
***பிணங்கு கதிர்க் கழனி நாப்பண்; ஐமுற்ற***
***உணங்கு கலன் இழியின் தோன்றும்***
***ஓர்எயில் மன்னன் ஒருமட மகளே (புறம்: 338)***

*என்ற பாடல் சுட்டுகிறது. இதில் ஆணின் ஆணவத்திற்கு பெண் பலிகிடாவாக ஆக்கபடுவதை காணலாம்.*

**பெண்ணின் மறம்**

*சங்ககாலப் பெண்கள் வீரம் உடையவர்களாக இருந்துள்ளதை புறநானூறு எடுத்தியம்புகின்றது. சங்க காலத்தில் போர் ஆணுக்குரியதாக அறிவிக்கப்பட்டாலும் ஆணினை போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கின்ற மனையில் வாழ்கின்ற மகளிருக்கும் அவ்வீர உணர்வு இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*ஒக்கூர் மாசாத்தியார் பாடலில் போரில் தனது நெருங்கிய உறவினராகிய தந்தையையும் கணவனையும் இழந்த பின்னர் மீண்டும் போர் முழக்கம் கேட்க, தன் குலப்பெருமையினைக்*

*காக்க எண்ணி; அறிவு மயங்கி தன்னுடைய ஒரே மகனின் தலைமுடியில் எண்ணெய் தடவி, வெள்ளாடை உடுத்தி வேலையும் கையில் கொடுத்து போர் முனை நோக்கிப் புறப்படுக என்று ஒரு மறக்குல பெண் அனுப்புகின்றாள். இதனை,*

***கெடுக சிந்தை கடிதுஇவள் துணிவே***
***மூதின் மகளிர் ஆதல் தழுமே***
***மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை***
***யானை எறிந்து களத்துஒழித் தனனே***
***நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்***
***பெருநிறை விலக்கி ஆண்டுப்பட் டனனே***
***இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி***
***வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்***
***பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி***
***ஒருமகன் அல்லது இல்லோள்***
***செருமுக நோக்கிச் செல்க என விடுமே (புறம்: 279)***

*இதில் மறக்குடியில் பிறந்த பெண் ஒருத்தியின் துணிவினையும் வீரத்தினையும் அறியலாம். போரில் புறமுதுகைக் காட்டி ஓடாமல் மார்பில் விழுப்புண் பட்டு இறந்த வீரனின் உடலைக் கண்டு அவனை ஈன்ற தாய் சிறப்புக்குரிய தன் மகனின் மறமாண்பு மேலிட அத்தாயின் வற்றிய முலைகளில் பால் ஊறிச் சுரந்தன என்று ஔவையார் பெண்மொழியாகக் கூறியுள்ளார்.*

***சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி***
***வாடு முலை எறிச் சுரந்தன***
***ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே (புறம்: 295)***

*இக்கவிதை பெண்மொழியாக உச்சம் பெற்றுள்ளமையைக் காணலாம். காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடலில் போர்க்களத்தில் புறமுதுகில் விழுப்புண்பட்டு உன்னுடைய மகன் வீழ்ந்தான் என்ற சொல் கேட்ட முதிய மறக்குல பெண் சினங்கொண்டு, எனது மகன் போரில் அஞ்சி இறந்தது உண்மையாயின் அவனுக்கு பாலூட்டிய முலையினை அறுத்திடுவேன் என்று வஞ்சினம் கூறி கையில் வாளுடன் போர்க்களம் சென்றாள். அவன் வீரமரணம் அடைந்துள்ளதைக் கண்டு அவனை ஈன்ற பொழுதைவிட பெரிதும் மனம் மகிழ்ந்தாள் (புறம்: 278). இங்கு மகன் இறந்தது இழப்பாக இருந்தாலும் அவனால் ஏற்பட்ட குடிப்பழியினைப் போக்க வேண்டியது தாயின் கடமையாகக் கருதப்பட்டுள்ளது. வீரத்தினைக் குறித்து கூறும் போது பெண்பாற் புலவர்கள் பெண்ணுடல் உறுப்புகளைக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளமைக் காணமுடிகின்றது. இக்கவிதைகளில் எல்லாம் ஆணின் வீரத்தைக் குறித்து கூறபட்டுள்ளதே தவிர பெண் குழந்தைகளின் திறத்தினைக் குறித்து எங்குமே கூறப்படவில்லை.*

**கைம்மைப் பெண்கள்**

*சங்ககாலச் சமுகத்தில் கணவனை இழந்த பெண்களை உடன்கட்டை ஏறச் செய்தும், கைம்மை நோன்பினை கடைபிடிக்குமாறு அறியுறுத்தியும் பெரும் துன்பத்திற்கு உள்ளாக்கியுள்ளனர். இவை அனைத்தும் ஆணாதிக்கச் சமுகத்தினரால் உருவாக்கப்பட்டவையாகும். கைம்மை நோன்பாக, நீர்ச்சோறு உண்ணுதல், வேளைக்கீரையுடன் புளி சேர்த்து உண்ணுதல், கற்களின் மீது தூங்கி கைம்மை நோன்பு இருத்தல் வேண்டும். அதோடு தலைமுடியினை மழித்து வீட்டை விட்டு வெளியே வராமல் இருத்தல் போன்ற கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டிருந்தன.*

*கல்லாடனார் பாடலில் கணவன் போரில் இறந்துவிட்டதை அறிந்த பெண் அறிவு மயங்கி அடித்து அழுகின்றாள். கைம்மை நோன்பின் பொருட்டு அவளுடைய கூந்தலை கொய்து நீக்கியமையினை,*

***ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர***
***அவிர் அறல் கடுக்கும் அம் மென்,***
***குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே (புறம்: 25)***

*என்று குறிப்பிடுகிறார். தாயங்கண்ணியார் தம் பாடலில் கணவனை இழந்த பின்னர் கைம்மையை ஏற்றப் பெண்ணின் கூந்தலைக் கொய்து, கைவளையலை நீக்கி அல்லியரிசியால் செய்த உணவினை உண்ணுமாறு செய்தலை,*

***கூந்தல் கொய்து, குறுந் தொடி நீக்கி***
***அல்லி உணவின் மனைவி (புறம்: 250)***

*என்று தன்னுடைய அனுபவத்தை கவிதையாக்கியுள்ளார். இங்கு கூந்தலை நீக்குதல் என்பது அவர்களை அவமானப்படுத்தி வீட்டினுள் முடக்குவதாக அமைகின்றது.*

*கைம்மை நோன்பின் துன்பத்தை அறிந்து சில பெண்கள் உடன்கட்டை ஏறியுள்ளனர். பூதபாண்டியன் இறந்த பின் அவனுடைய மனைவி பெருங்கோப் பெண்டு உடன்கட்டை ஏற முன் வந்தபோது, ஊரில் உள்ள சான்றோர்கள் அவளைத் தடுத்து நிறுத்துகின்றனர். பெருங்கோப் பெண்டு கல்வியறிவில் சிறந்தவள் எனவே அரசனுக்கு பின் நல்லாட்சி செய்வாள் என்ற எண்ணத்தில் சான்றோர்கள் அவளைத் தடுத்தனர். அப்போது அவள் கைம்மைத் துயரத்தைப் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இதில் கணவனை இழந்த கைம்மை மகளிருக்குச் சோற்றுத்திரள் வெள்ளரிக்காய் விதைப் போன்று உண்பதற்கு இயலாததாய் இருக்கும். அதனுடன் வெண்மையான எள்ளுத்துவையலுடன் புளியுடன் சமைத்த வேளைக்கீரையையும் வேக வைத்து உணவாக உண்பர். அதோடு கைம்மை மகளிர் பருக்கைக் கற்கள் அமைத்த படுக்கையின் மீது பாயுமின்றிப் படுப்பர். இத்தகைய கைம்மை நோன்பால் வருந்தும் பெண்ணாக நான் இருக்க மாட்டேன். கணவன் இறந்த பின்னும் வாழும் துன்பத்தை விட கணவன் இறந்தவுடன் செல்வதே நல்லது. தன் கணவன் இறந்த பிறகு தீயும் பொய்கையும் ஒன்றே என்று கூறி கோபத்துடன் உடன்கட்டை ஏறுகின்றாள்.*

***பெருங் காட்டுப் பண்ணிய கருங் கோட்டு ஈன்ம்***
***நுமக்கு அரிதாகுகதில்ல, எமக்கு எம்***
***பெருந் தோட் கணவன் மாய்ந்தென, அரும்பு அற***
***வள் இதழ் அவிழ்த்த தாமரை***
***நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே (புறம்: 246)***

*இங்கு பெருங்கோப் பெண்டு கல்வியறிவு பெற்ற அரசியாக இருந்தாலும் கைம்மை நோன்பு துயரம் கணவனை இழந்த அனைவருக்கும் பொதுவானது. இதில் யாருக்கும் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. மேலும் போரில் கணவனை இழந்த மகளிர் உயிரோடு இருந்து கைம்மையை ஏற்காமல் பசிய கீரைகளை உண்ணாது, குளிர்ந்த நீரில் மூழ்காது தன்னுடைய கணவனின் மார்பில் சேர்ந்து உயிர் விட்டமையினை,*

***உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்***
***பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்***
***மார்பகம் பொருந்தி இங்கமைந் தனரே (புறம்: 62)***

*என்று கழாத்தலையார் பாடியுள்ளார். பெண்கவிஞர்கள் தங்களின் கவிதையின் வழியாக கைம்மை நோன்பினை எதிர்த்துள்ளமையினை உணரமுடிகின்றது.*

**முடிவாக**

*புறநானூறு வழியாக பெண்கவிஞர்களின் பெண்ணிய சிந்தனைகளைப் பார்க்கும் போது ஆணாதிக்க சமுகத்தில் பெண்களை அடிமைப்படுத்தும் முயற்சியில் பல்வேறு கட்டமைப்புகளைப் புனையபட்டுள்ளமையினை அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய கட்டமைப்புகளை உடைக்கும் விதமாக பெண் கவிஞர்களின் படைப்புகள் வீரியம் பெற்றுள்ளன. மேலும் ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண் கவிஞர்களின் படைப்புகள் அக்கால சூழலில் அதிகமாக வெளிவந்திருக்கலாம். ஆனால் சங்க இலக்கிய தொகுப்பாளர்கள் அவற்றை தொகுக்காமல் விட்டிருக்கவும் வாய்ப்பு உள்ளது. தற்போது உள்ள கவிதைகளில் பெண்ணிய சிந்தனைகள் வெளிப்பட்டு இருந்தாலும் அவை மறைமுகமாக உள்ளமை குறிப்பிடதக்கதாகும்.*

**பயன்பட்ட நூல்கள்**

1. *அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, 1981.*
2. *சாமிநாதையர், உ.வே., (ப.ஆ). புறநானூறு மூலமும் பழைய உரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1975.*
3. *சிதம்பரனார். சாமி. எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அறிவுப்பதிப்பகம், சென்னை, 2009.*
4. *பிரேமா, இரா., பெண்ணியம், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 2000.*

## References

1. *Akananooru, New Century Book House (P) Ltd, Chennai, 1981.*
2. *Saminathiyar, U.W., (P.A.). Through the Purananooru and the old text, Dr. U.V.S. Library, Chennai, 1975.*
3. *Chidambaranar. Sami. Ettuthokai Tamizhlar Panpaadu, Arivu Pathippagam, Chennai, 2009.*
4. *Prema, R., Feminism, Barry Book Farm, Chennai, 2000.*